செ.வெ.எண்:34/2020 நாள்:21.09.2020

# பத்திரிக்கைச் செய்தி

**சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன்,இ.ஆ.ப., அவர்கள் செய்திக் குறிப்பில் தெரிவித்தாவது,**

2021 ஜனவரி 24 தேசிய பெண் குழந்தை தினத்தன்று மாவட்டத்தில் பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், அனைத்து பெண் குழந்தைகளும் 18 வயது வரை கல்வி கற்றலை உறுதி செய்யவும், பெண் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்கவும், பெண் குழந்தை திருமணங்களைத் தடுக்கவும் பாடுபட்டு, வீரதிர செயல் புரிந்த 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு விருது வழங்கப்பட உள்ளது.

மேற்படி விருதிற்கு சிவகங்கை மாவட்டத்தில் கீழ்க்கண்ட தகுதியினை உடைய 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகள் சிவகங்கை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட சமூக நல அலுவலகத்தில் 23.11.2020 மாலை 5.00 மணிக்குள் விண்ணப்பிக்குமாறு சிவகங்கை, மாவட்ட ஆட்சியர் அவர்களால் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**தகுதிகள் :**

1. 5வயதிற்கு மேல் 18 வயதிற்குட்ட தமிழகத்தில் வசிக்கும் பெண் குழந்தை (31 டிசம்பர்-ன் படி)

2. கீழ்கண்டவற்றில் வீர தீர செயல் புரிந்திருக்க வேண்டும்.

- பிற பெண் குழந்தைகளின் கல்விக்கு உதவுதல்
- பெண் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு
- பெண் குழந்தை திருமணத்தை தடுத்தல் மற்றும் தவிர்த்தல்
- வேறு ஏதாவது வகையில் சிறப்பான/தனித்துவமான சாதனை செய்திருத்தல்
- பெண்களுக்கு எதிரான சமூக அவலங்கள், மூடநம்பிக்கைகள் ஆகியவற்றிற்கு தீர்வு காண்பதற்கு ஓவியங்கள், கவிதைகள் மற்றும் கட்டுரைகள் மூலமாகவோ விழிப்புணர்வை ஏற்படுத்தியிருத்தல்

ஆண்கள் மட்டுமே சாதிக்க முடியம் என்பதை போன்ற செயல்களை பெண்களாலும் சாதிக்க முடியும் என்று சாதித்திருக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**::வெளியீடு::**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**சிவகங்கை.**